செ.வெ.எண் : 61 நாள் : 27.11.2026

நாகப்பட்டினம் மாவட்டத்தில் முதியவர்கள் மற்றும் மாற்றுத்தினாளிகளுக்கு பொதுவிநியோக திட்ட அத்தியாவசியப் பொருட்கள் 2026 டிசம்பர் மாதம் 05 - ஆம் தேதி (சனிக்கிழமை) மற்றும் 06-ஆம் தேதி (ஞாயிற்றுக்கிழமை) ஆகிய தேதிகளில் வீடு தேடி சென்று வழங்கப்படும் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.கே.ஜே.பிரவீன் குமார்.இ.ஆ.ப. அவர்கள் தகவல்.

நாகப்பட்டினம் மாவட்டத்தில் இல்லம் சென்று பொது விநியோக திட்ட அத்தியாவசியப் பொருட்கள் விநியோகிக்கும் திட்டத்தின் கீழ் 2026 டிசம்பர் மாதம் 05 - ஆம் தேதி (சனிக்கிழமை) மற்றும் 06 - ஆம் தேதி (ஞாயிற்றுக்கிழமை) ஆகிய தேதிகளில் 65 வயதிற்கும் மேற்பட்டோர் மற்றும் மாற்றுத்திறனாளி உள்ள குடும்ப அட்டைதாரர்களின் இல்லத்திற்கே சென்று அத்தியாவசியப் பொருட்கள் விநியோகம் செய்யப்பட உள்ளது.

தகுதியுடைய குடும்ப அட்டைத்தாரர்கள் மேற்கண்ட தேதிகளில் இத்திட்டத்தினை பயன்படுத்தி பயன் அடையலாம் என மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.கே.ஜே.பிரவீன் குமார்,இ.ஆ.ப அவர்கள் தெரிவித்துள்ளார்

செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், நாகப்பட்டினம்.